ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2267/9 - 2022 පෙබරවාරි මස 14 වැනි සඳුදා - 2021.02.14

2267/9 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 14 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: DS/TG/LND/ACQUN/01/28(1).
காணி அமைச்சின் இல.: 2014/TC/පෝද්‍ය.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1978.05.19 ஆந் திகதியிடப்பட்ட 318 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட காணி எடுத்தற் சட்டத்தின் பிரிவு 7 இன் கீழ் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காணியின் விபரம் பின்வருமாறு திருத்தப்படும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படு கின்றது.

சிங்கள மொழியின் பக்கம் 434 இல் காணி உரிமை தொடர்பான விசாரணை “1978.08.10 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு” எனவும், பிரதேச செயலகத்திற்கு என்முன்பாக வெளிப்படுத்தும் படியும், அக்காணிக் குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணி எடுத்ததற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிப்பிடப்பட்ட விபரங் களையும் “1978.08.01” ஆந் திகதிக்கு முன் எழுத்தில் முப்பிரதிகளாக அறிவிக்கும் படி வெளியிடப்பட்டுள்ளது. மேல்முறையீட்டு நீதிமன்ற தீர்ப்பின் பிரகாரம் குறித்த திகதிகள் முறையே “2022.03.10 ஆந் திகதி மு.ப. 10.00” மணி எனவும் “2022.03.01” எனவும் திருத்தம் செய்யப்பட்டுள்ளது என இத்தால் அறியத்தருகின்றேன்.

பொ. தனேஸ்வரன்,
பிரதேச செயலாளர்,
பட்டினமும் சூழலும்,
திருகோணமலை.

பிரதேச செயலகம்,
பட்டினமும் சூழலும்,
திருகோணமலை,
2022, பெப்புருவரி 10.

EOG 02 - 0476